பசெ.வெ.எண்:03/2019 நாள்:03.08.2019

**பத்திரிக்கைச் செய்தி**

**கிறித்தவர்கள் ஜெருசலேம் பயணம் மேற்கொள்வதற்கு தமிழக அரசின் நிதியுதவி வழங்கும் திட்டம் 2019-20**

தமிழ்நாட்டைச் சேர்ந்த கிறித்தவர்கள் ஜெருசலேம் புனிதப்பயணம் மேற்கொள்வதற்காக தமிழக அரசால், நபர் ஒருவருக்கு ரூ.20,000/- (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ், பயன்பெற விரும்பும் கிறித்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் அனைத்து பிரிவினர்களை உள்ளடக்கிய 600 கிறித்தவர்கள் இதில் 50 கன்னியாஸ்திரியர்கள் /அருட்சகோதரிகள் புனித பயணம் மேற்கொள்ள அனுமதித்தும் அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

இப்புனித பயணம் இஸ்ரேல், எகிப்து மற்றும் ஜோர்டான் ஆகிய நாடுகளில் உள்ள பெத்லஹேம், ஜெருசலேம், நாசரேத், ஜோர்டான் நதி, கலிலேயாசமுத்திரம் மற்றும் கிறித்தவ மத தொடர்புடைய பிற புனித தலங்களையும் உள்ளடக்கியது. இப்புனித பயணம் அக்டோபர் 2019 முதல் மார்ச் 2020 வரை மேற்கொள்ள உத்ததேசிக்கப்பட்டுள்ளது. பயணக்காலம் 10 நாட்கள் வரை இருக்கும்.

இதற்கான விண்ணப்பப்படிவம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இயங்கும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்திலிருந்து கட்டணமின்றி பெறலாம். தவிர **www.bcmbcmw.tn.gov.in** என்ற இணையதள முகவரியில் விண்ணப்பப் படிவத்தை பதிவிறக்கம் செய்தும் பயன்படுத்தலாம். இத்திட்டத்திற்கான நிபந்தனைகள் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் அனைத்தும் உரிய இணைப்புகளுடன் அஞ்சல் உறையில் **"கிறித்தவர்களின் ஜெருசலேம் புனித பயணத்திற்கான நிதியுதவி கோரும் விண்ணப்பம் 2019-20"** என்று குறிப்பிட்டு ஆணையர், சிறுபான்மையினர் நலத்துறை, கலசமஹால் பாரம்பரிய கட்டடம், முதல் தளம், சேப்பாக்கம், சென்னை 600 005 என்ற முகவரிக்கு 30.08.2019-க்குள் கிடைக்கும் வகையில் அனுப்புதல் வேண்டும். (நேரில் வரவேண்டியதில்லை) மேலும், விவரங்களுக்கு மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்/சிறுபான்மையினர் நல இயக்குநரகம், தொலைபேசி எண்:044-28520033-லும் தொடர்பு கொள்ளலாம்.

எனவே, சிவகங்கை மாவட்டத்தில் உள்ள கிறித்தவர்கள் இத்திட்டத்தின் கீழ் உடன் விண்ணப்பித்து பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.ஜெயகாந்தன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**::வெளியீடு::**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**சிவகங்கை.**